# காலை முரசு

பக்கங்கள் 14

முழக்கம்: 01 | வள்ளுவ ஆண்டு 2054 | புரட்டாதி 20 | சனிக்கிழமை 07.10.2023 | அதிர்வு 67


## மண்மேடு சரிந்து குடும்பஸ்தர் சாவு

மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் பிபிலை – குடாவலை பகுதியில் நேற்று முற்பகல் 04

# கொழும்பில் 7 இடங்களில் தாக்குதல் நடத்தத் திட்டமா?

## விசாரணை கோருகின்றார் சஜித்



"கொழும்பில் உள்ள ஏழு இடங்கள் மீது ஐ.எஸ். குண்டுத் தாக்குதல் நடத்தத் திட்டம் இருப்பதாக அரச பத்திரிகையான 'தினமின' வில் செய்தி வெளியாகியுள்ளது. இது தொடர்பில் நாடாளுமன்றம், நாட்டுக்கும் மக்களுக்கும் உண்மைத்தன்மையைச் சரியாக அறிவிக்க வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–"சிறைச்சாலையில் இருக்கும் 04

# சர்வதேச விசாரணை; தவிர்க்கவே முடியாதது

## சந்திரிகா கூறுகின்றார்



(சுடர் திலீபன்)

**"இலங்கை அரசு விரும்பியோ விரும்பாமலோ சர்வதேச விசாரணையை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளது."**

**- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.** 02



# அடுத்த வாரம் ஒரு நாளில் ஹர்த்தால் நடத்த ஏற்பாடாம்

## தமிழ்க் கட்சிகள் தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு – கிழக்கில் அடுத்த வாரத்தில் ஒரு நாளில் பூரண ஹர்த்தாலை நடத்தத் தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாகத் தீர்மானித்துள்ளன. 04

### பஸ் மீது மரம் முறிந்து வீழ்ந்த அனர்த்தத்தில்

# பலியானோரின் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபா நிதி உதவி



கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீது பாரிய மரம் முறிந்து வீழ்ந்ததில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபா இழப்பீடாக வழங்குமாறு ஜனாதிபதி 04




சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட்டின் எம்.பி. பதவியைப் பறிக்கும் வகையில் உயர் நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பு மிக முக்கியத்துவமானது. வரலாற்றுச் சிறப்புமிக்கது.

இந்த வழக்கில் 02

# பிரபல ஜோதிடர் இந்திக்க கைது!

## 20 ஆம் திகதி வரை விளக்கமறியல்



மதக் கோட்பாடு மற்றும் நம்பிக்கைகளை அவமதித்த குற்றச்சாட்டில் பிரபல ஜோதிடர் இந்திக்க தொடவத்த கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி காணொலிகள் ஊடாக நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தினார் என்று அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 12 தரப்பினரிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் ஜோதிடர் இந்திக்க தொடவத்த பொலிஸ் கணினி குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று முற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதையடுத்து, அவர் நேற்று பிற்பகல் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து, நீதிவானின் உத்தரவுக்கமைய, எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜோதிடர் இந்திக்க தொடவத்த, பிறப்பிலிருந்தே கண்பார்வையை இழந்தவராவார்.

## இராமநாதபுரம் பகுதியில் வீடொன்றுக்குத் தீ வைப்பு

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி, இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மடுநகர் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தில் ஆத்திரமடைந்த ஒரு தரப்பினர் மற்றைய வீட்டுக்குத் தீ வைத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாய்த்தர்க்கம் காரணமாக நேற்று அதிகாலை குறித்த வீட்டில் யாரும் இல்லாத வேளை தீ வைக்கப்பட்டுள்ளது.

வீட்டின் கண்காணிப்பு கமராக்களை உடைத்துவிட்டு வீட்டின் கதவுகளையும் உடைத்துத் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் வீட்டில் இருந்த தொலைக்காட்சி, மின் இணைப்புக்கள் மற்றும் மின்விசிறி என 80 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இதையடுத்து அயலவர்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டது. பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த இராமநாதபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

---

**இரகசியம்...**

வெற்றியீட்டிய தரப்புக்காக வாதாடிய ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கூறியபடி கடந்த 30 ஆண்டு காலத்தில் இப்படியான வழக்குகளில் மற்றைய தரப்புக்கு (பதவி நீக்க நெருக்கடிக்கு உள்ளாகும் எம்.பியின் தரப்புக்கு) ஆதரவாகவே உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகள் வழங்கப்பட்டு வந்தன.

1991இல் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த காமினி திஸநாயக்கா மற்றும் லலித் அத்துலத் முதலி ஆகியோரைக் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கியது அக்கட்சி. அது சட்டரீதியில் சரியானது என்று தீர்ப்பளித்த உயர் நீதிமன்றம், அதன் மூலம் காமினி திஸநாயக்கா மற்றும் லலித் அத்துலத் முதலி ஆகியோர் தங்களது எம்.பி. பதவியை இழக்க வழி செய்தது.

அதற்குப் பின்னர் 30 ஆண்டுகள் கழித்து, இப்போது நஸீர் அஹமட்டை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியேற்றியமை சட்டரீதியானது என்று தீர்ப்பளித்து அவரது எம்.பி. பதவி பறிபோக வழி செய்திருக்கின்றது உயர் நீதிமன்றம்.

2010 நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) வேட்பாளர் பட்டியலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பொடி அப்புஹாமி பியசேன பின்னர் அரசு பக்கம் – ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிப் பக்கம் – பாய்ந்தார். அவரைக் கூட வழக்கு போட்டு நீக்குவதற்கு கூட்டமைப்புச் சட்டத்தரணிகளால் இயலவில்லை.

இப்போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது கட்சியை விட்டுக் குத்துக்கரணம் அடித்த ஒரு முக்கிய பிரமுகரை – கிழக்கின் மாகாண முதலமைச்சராக இருந்த, நன்கு விவரம் தெரிந்த ஒரு முக்கியஸ்தரை – சட்டத்தை நன்கு கையாளும் பரிச்சயம் உள்ள ஒரு பொறியியலாளரை – வெற்றிகரமாக எம்.பி. பதவியைப் பிடுங்கி வீட்டுக்கு அனுப்ப முடிந்தது என்றால், அதற்கு ஒரே காரணம்தான் உண்டு. அவர் தொடர்பான விடயங்களை முழு சட்டமுறைக்கு அமையக் கையாளத்தக்க விதத்தில் கடிதப் போக்குவரத்து, ஆவணங்கள் பேணல், கூட்டப் பதிவுகள், உரிய வேளையில் உரிய கடிதங்களை உரிய முறையில் அனுப்புதல் போன்ற விவகாரங்களை அக்கட்சியின் செயலாளர் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் தலைமையிலான நிர்வாக அணி ஒழுங்காக மேற்கொண்டமைதான்.

நேற்று உயர்நீதிமன்றம் வழங்கிய 62 பக்கத் தீர்ப்பை எடுத்துப் பார்த்தால் இந்த விடயத்தை ஒட்டி முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த பல்வேறு ஆவணங்கள்தான் அதன் வெற்றிக்கு அடிப்படை – பிரதான காரணம் – என்பது புலனாகும். அவற்றை வைத்துக்கொண்டுதான் சுமந்திரன் உள்ளிட்ட கட்சியின் சட்டத்தரணிகள் அத்தகைய தீர்ப்பு ஒன்றை உயர்நீதிமன்றத்திடமிருந்து பெற முடிந்தது என்பது கவனிக்கத்தக்க விடயம்.

இது விவகாரத்தில் தமிழ் கட்சிகளின் – குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் – நிலைமை சொல்லத் தேவையில்லை. வருடாந்தத் தேசிய மாநாட்டை நான்கு, ஐந்து வருடங்களாக நடத்தத் தவறியமையால் கட்சிப் பதிவே அம்போவாகும் சட்ட ஆபத்து – நெருக்கடி நிலைமை – உள்ளது. சாதாரண கட்சி உறுப்பினர் ஒருவர் நீதிமன்றுக்குப் போனாலே சட்டச் சிக்கலை எதிர்கொள்ளக்கூடிய இக்கட்டிலிருக்கும் தமிழரசுக் கட்சியினால் மேற்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போல நிலைமையைப் பேண முடியாது என்பது ஒப்புக்கொள்ள வேண் டிய பின்னடைவே.

இது தமிழரசுக் கட்சியைக் குறை கூறுவதற்கான கருத்தல்ல. அக்கட்சி தன்னைத் திருத்தி மேம்பட வேண்டும் என்ற ஆதங்கத்தில் செய்யப்பட்ட ஒப்பீட்டுப் பதிவு மட்டுமே.

---

**சர்வதேச...**

அவர் மேலும் கூறுகையில்,

“போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களில் ஒரு தரப்பினர் இந்த அரசில் அங்கம் வகிக்கின்றனர். அதேவேளை, மற்றொரு தரப்பினரை இந்த அரசு பாதுகாத்து வருகின்றது.

இப்படியான அரசு எப்படி சர்வதேச விசாரணைக்கு இடமளிக்கமாட்டோம் என்று வெளிநாடுகளுக்கும், சர்வதேச அமைப்புக்களுக்கும் சவால் விட முடியும்?

தற்போதைய ஜனாதிபதி (ரணில் விக்கிரமசிங்க) சர்வதேச விசாரணைக்கு அனுமதி வழங்கமாட்டேன் என்று கூறினாலும், இறுதியாகப் பதவிகளில் இருந்த மூன்று ஜனாதிபதிகளும் (மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ) சர்வதேசம் முன் வைத்துள்ள குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்பானவர்கள். தற்போது அவர்கள் யாரின் பாதுகாப்பில் உள்ளார்கள்?

எனவே, தற்போது ஜனாதிபதிப் பதவியில் இருப்பவரும் (ரணில்), அவர் தலைமையிலான அரச தரப்பினரும் விரும்பியோ விரும்பாமலோ சர்வதேச விசாரணையை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளனர்.” – என்றார்.




# மற்றுமொரு பாரிய விபத்து பஸ் சாரதி பலி; பலர் காயம்

மீரிகம – நீர்கொழும்பு வீதியில், கொட்டதெனிய, வெலிஹிந்த சந்தியில் இடம்பெற்ற விபத்தில் பஸ் சாரதி உயிரிழந்தார்.

நேற்றுக் காலை மணல் ஏற்றி சென்ற லொறி ஒன்றுடன் தனியார் பஸ் ஒன்று மோதி விபத்துள்ளாகி யுள்ளது.

இந்த விபத்தில் பலர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்தில் லொறி மற்றும் பஸ் ஆகியவற்றின் முன்பகுதிகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

# விக்கிக்குச் சட்டம் தெரியாது!

## முன்னணியின் பேச்சாளர் சுகாஷ் பதிலடி

(எஸ்.நிதர்ஷன்)

“அரசைக் காப்பாற்றுவதற்காகத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பொய் கூறுகின்றார் அல்லது அவருக்குச் சட்டம் தெரியாது.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மையில் ஊடகமொன்றுக்கு விக்னேஸ்வரன் வழங்கி செவ்வியொன்று குறித்து சர்ச்சை ஏற்பட்டிருக்கும் நிலைமையில் இந்த விடயம் தொடர்பில் விக்னேஸ்வரனுக்கு எனக் குறிப்பிட்டு சுகாஷ் வெளியிட்டுள்ள அறிக்கையிலையே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“எனக்கு உங்கள் அளவுக்குச் சட்டத்துறையில் அனுபவம் இல்லாவிட்டாலும், எனது 12 வருடக் குறுகிய அனுபவத்தில் இதனைக் கூறுகின்றேன்.

குருந்தூர்மலை வழக்கில் வழங்கப்பட்டது “தீர்ப்பு” (Judgement) அல்ல, “கட்டளை”யே (Order) ஆகும். நீதிபதி ஒருவர் தன்னால் வழங்கப்பட்ட தீர்ப்பையோ அல்லது கட்டளையையோ “கைபிறழ்பாடானது” (Per Incuriam) என்பதன் அடிப்படையில் மாற்றுவதற்குச் சட்டத்தில் இடமுண்டு.

நிலைமை இவ்வாறிருக்க, நீங்கள் இவ்வாறு உண்மைக்குப் புறம்பாகக் கூறுகின்றீர்கள் என்றால், நீங்கள் அரசைக் காப்பாற்றுவதற்காகப் பொய் கூறுகின்றீர்கள். அல்லது உங்களுக்குச் சட்டம் தெரியாது. உங்கள் பதில் என்ன?

மக்களின் பதில் என்ன?” – என்றவாறாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சுகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

# ஏற்கனவே காணாமல்போய் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிறுவன் மீண்டும் மாயம்!

## 6 மாதங்களாகத் தேடுகின்றனர் பெற்றோர்

கஹவத்தை – ஓபாத்த பகுதியைச் சேர்ந்த 13 வயதான சிறுவன் ஒருவர் கடந்த 2023.03.13 ஆம் திகதி முதல் 7 மாத காலமாகக் காணாமல் போயுள்ளார் என்று அவரது பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

ஓபாத்த இலக்கம் ஒன்று தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயின்ற 13 வயதான நாகராஜ் திஷோர்காந்த் என்ற சிறுவனே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

காணாமல்போன சிறுவன் இதுவரை வீடு திரும்பவில்லை என்று பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

சிறுவன் ஏற்கனவே ஒரு தடவை காணாமல் போன நிலையில், யாழ்ப்பாணத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டார் என்றும் பெற்றோர் கூறுகின்றனர். இந்தநிலையில், சிறுவன் மீண்டும் காணாமல்போயுள்ளமை தொடர்பில் கஹவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுவன் தொடர்பான தகவல்கள் தெரியும் பட்சத்தில், 076 3718398 என்ற இலக்கத்துக்கு அறியத் தருமாறு பெற்றோர் கேட்டுக்கொள்கின்றனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





## அடுத்த வாரம்...

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாகப் பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காண்பிக்கும் வகையில் கடந்த வாரத்தில் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடிய தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருமித்து சில தீர்மானங்களை எடுத்திருந்தன.

இதற்கமைய இவ்வாரம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் மனிதச் சங்கிலிப் போராட்டத்தை தமிழ்த் தேசியக் கட்சிகள் நடத்தியிருந்தன. இதன் தொடராகவே வடக்கு - கிழக்கு தழுவிய பூரண ஹர்த்தாலுக்கும் அந்தக் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனின் யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் நேற்று ஒன்றுகூடி கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் வாரத்தின் ஒரு நாளில் வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் பூரண ஹர்த்தாலை நடத்துவது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கூட்டத்தின் முடிவில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் உள்ள பொது அமைப்புக்கள், சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களுடனும் கலந்துரையாடி சகலரதும் ஆதரவையும் பெற்று இன்னும் சில நாட்களில் ஹர்த்தால் நடைபெறும் திகதி தொடர்பில் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், ஹர்த்தால் தொடர்பில் முஸ்லிம் மக்களுடனும் பேசி அவர்களது ஆதரவையும் பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும், இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் மீண்டுமொரு தடவை ஒன்றுகூடிக் கலந்துரையாடி ஹர்த்தால் நடைபெறும் திகதி தொடர்பான அறிவிப்பை வெளியிடவுள்ளதாகவும் சிறிகாந்தா மேலும் தெரிவித்தார்.

நேற்றைய கூட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா, தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், ரெலோவின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் தியாகராஜா நிரோஷ், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் எஸ்.கலையமுதன் மற்றும் புளொட் அமைப்பின் முக்கியஸ்தர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கொழும்பில்...

ஐ.எஸ். பயங்கரவாதிகளால் இந்தத் தாக்குதல் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பாரதூரமான விடயம் என்பதால், இதன் உண்மைத்தன்மை குறித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க அனுமதிக்க முடியாது என்பதால் கடந்த காலங்களில் இருந்து பாடம் கற்று இந்த அபாயம் குறித்து ஆராய வேண்டும்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு நாட்டின் சட்டத்தினுள் இயன்ற உச்சபட்ச நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்." - என்றார்.

## பலியானோரின்...

ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம், உரிய இழப்பீட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சுக்கும், இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, இந்த இழப்பீட்டுத்தொகையை வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுத் துள்ளது என அதன் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார். இந்த விபத்தில் காயமடைந்தவர்களைக் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்குச் சென்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துக் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நேற்றுக் காலை கொழும்பில் இருந்து தெனியாய நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் மீது, கொள்ளுப்பிட்டி - டுப்ளிகேஷன் வீதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்தனர்.

பயணிகளை ஏற்றுவதற்காக பஸ் நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்த அனர்த்தம் நேர்ந்தது. இந்த விபத்தில் மேலும் 12 பேர் காய மடைந்து கொழும்பு தேசிய வைத்திய சாலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

40 வருடங்கள் பழமை வாய்ந்த ரொபரோஸியா வகையைச் சேர்ந்த மரமே பஸ்ஸின் மீது முறிந்து வீழ்ந்துள்ளது எனத் தெரியவந்துள்ளது.

எனினும், இந்த மரத்தை அகற்ற வேண்டும் என எந்தவொரு கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை எனக் கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்தார்.

"இந்த வகை மரம் மேலும் சில பகுதிகளில் உள்ளன. இந்த மரத்தின் தன்மை தொடர்பில், ஆராய்ந்து அவற்றை அகற்றுவது தொடர்பில் எதிர்வரும் காலங்களில் தீர்மானிக்கப்படும்" - எனவும் கொழும்பு மாநகர ஆணையாளர் மேலும் கூறினார்.

## மண்மேடு சரிந்து...

இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டவர் மீதே மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.சம்பவத்தில் 48 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முறிந்து விழும் அபாயத்திலுள்ள மரங்களை உடனடியாக அகற்றுக!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அறிவுறுத்தல்

வீதியோரங்களில் முறிந்து விழும் அபாயத்தில் உள்ள பாரிய மரங்கள் தொடர்பில் உடனடியாக ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மக்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தும் மரங்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறு அவர் பணித்துள்ளார்.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் அதிகாரிகளுக்கு அவர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளையும் இந்த நடவடிக்கையில் இணைத்துக்கொள்ளுமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் பஸ் ஒன்றின் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் 5 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.



# A/L பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை 10 ஆம் திகதி வரை நீடிப்பு

2023 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பிக்க முடியாத மாணவர்களின் நலன் கருதி விண்ணப்பக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கு எதிர்வரும் 10ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை 2024 ஜனவரி 4 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கார் மோதி பொலிஸ் உத்தியோகத்தர் சாவு: கைதான சாரதிக்கு 10 வரை விளக்கமறியல்

கொழும்பு – கறுவாத்தோட்டம் பகுதியில் கார் மோதி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதான சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் புதுக்கடை 7ஆம் இலக்க நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கறுவாத்தோட்டம் – சுதந்திர சதுக்க சுற்றுவட்ட வீதிக்கு அருகில் நேற்றுமுன்தினம் மாலை பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் ஈடுபட்டிருந்த போது கார் மோதி படுகாயமடைந்தார்.

அவர் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் வலஸ்முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடையவராவார்.

விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட நபர் தனியார் நிறுவனமொன்றில் தொழில்நுட்பப் பொறியியலாளராகப் பணிபுரியும் நாரஹேன்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஆவார்.

இதேவேளை, போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்தபோது விபத்தில் உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்குச் சார்ஜன்டாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கொழும்பில் 15 மணிநேர நீர் வெட்டு!

அத்தியாவசிய முன்னேற்றப் பணிகள் காரணமாக கொழும்பின் சில பகுதிகளுக்கு இன்று மாலை முதல் 15 மணித்தியாலங்களுக்கு நீர் விநியோகம் தடைப்படும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்று மாலை 5 மணி முதல் நாளை காலை 8 மணி வரை வலையமைப்பு விநியோகம் இடைநிறுத்தப்படுகின்றது.



இந்தக் காலப்பகுதியில் கொழும்பு 11, 12, 13 மற்றும் கொழும்பு 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளுக்கு நீர் விநியோகம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகத் தேவையான நீரைச் சேமித்து வைக்குமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மக்களுக்கு அறிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## புதைக்கப்படும் புதைகுழி விடயம்

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி மீண்டும் ஆரம்பிக்கப்படாமல் நிறுத்தப்படக் கூடிய சூழலே காணப்படுகின்றது என்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சட்ட அதிகாரி கூறியுள்ளார்.

இந்த அகழ்வுப் பணியை முன்னெடுப்பதற்கான நிதி ஒதுக்கீடு இல்லை என்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் கணக்காளர் தெரிவித்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

இந்த அகழ்வுப் பணி கடந்த செப்டம்பர் 6ஆம் திகதி தொடங்கி 15 ஆம் திகதி வரை நடைபெற்றது. 17 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டமையுடன் அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டன.

நிதிப் பற்றாக்குறையைக் காட்டி உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் ஆப்படித்த ரணிலின் அரசு, இந்த விடயத்திலும் நிதியை வெட்டி, அகழ்வுப் பணியை முடக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

இந்த அகழ்வுப் பணியை ஆரம்பித்ததே ஒரு கண்துடைப்பு வேலைதான். அதில் வெளிப்பட்ட எலும்புக்கூடுகள் தமிழ்ப் போராளிகளினுடையவை என்ற தகவல் ஓரளவு ஊர்ஜிதமாகத் தொடங்கியவுடனே இந்தப் பணி இப்படியே நிறுத்தப்படும் என்று எதிர் பார்க்கப்பட்டது. அதுவே நடந்திருக்கின்றது.

இதேவேளை, ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர் கள், காணாமல்போனவர்களின் குடும்பங்கள், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான நிலையம், சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தால் 'இலங் கையில் பாரிய மனிதப் புதைகுழிகளும் தோல்வி யடைந்த அகழ்வுகளும்' என்று தலைப்பிடப்பட்ட - 75 பக்கங்களைக் கொண்ட - கடந்த ஜூன் மாதம் 20ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ள விடயங்கள் கவனிக்கத் தக்கவை.

■ எந்தவொரு இலங்கை விசாரணை ஆணைக் குழுவும் பாரிய மனிதப் புதைகுழிகளை நோக்குகின்ற - கையாளுகின்ற - அதிகாரத்தைக் கொண்டிருக்க வில்லை. உண்மையைக் கண்டறியும் நடவடிக்கைகள் தடுக்கப்படுகின்றன. திடீரென நீதவான்கள், தடய வியல் நிபுணர்கள் இடமாற்றப்படுகின்றனர்.

■ சட்ட ஆணைகளை நிறைவேற்றுவதை பொலிஸ் தாமதப்படுத்துகிறது. சம்பவ இடங்களுக்கு குடும்பங் களின் வழக்கறிஞர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. உயிருடனுள்ள சாட்சிகளைக் கண்டுபிடிப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

■ இறப்பின் முன்னான எவ்வித தகவல்களும் சேகரிக்கப்படவில்லை. அரிதாக சிலர் குற்றவாளி யாக்கப்பட்டால், அவர்களுக்குப் பின்னர் பொதுமன் னிப்பு அளிக்கப்படுகின்றது.

■ காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்க ளுக்கு இது தீர்க்கமுடியாத துயரமாக உள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உண்மையை அறியாமலே இறக்கிறார்கள்.

■ பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பான பொலிஸ் விசாரணைகளை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தடுத்தார்.

- என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தப் பின்புலத்தில் மனிதப் புதைகுழிகளின் உண்மைகள் வெளிவர கொழும்பு அரசு உதவும், அந்த விடயத்தில் பொறுப்புணர்வோடு நடக்கும் என் எதிர்பார்ப்பது துர்லபமே.

# சர்வதேச விசாரணையை நடத்துவது சட்டவிரோதம்

## இப்படிச் சொல்கின்றது ஜனாதிபதி ஊடகப் பிரிவு

"இலங்கையின் அரசமைப்பிலும் வேறு எந்தச் சட்டத்திலும் சர்வதேச விசாரணைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இல்லை. அதன்படி, இது போன்ற விசார ணைகளை நடத்துவது சட்டவிரோதமானது" – என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சனல் 4 விவகாரம் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர், அது தொடர்பில் கத்தோலிக்க திருச்சபையுடன் கலந்தாலோசிப்பதற்கு அரசு தயாராகவுள்ளது என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

சிங்களப் பத்திரிகையொன்றில் பிரசுரமான 'சுயாதீனமானதும் வெளிப்படையானதுமான முழுமையான விசாரணை மற்றும் கண்காணிப்புக்கு சர்வதேச விசாரணைக் குழு ஒன்று தேவை' என தலைப்பிடப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை மேற்கோள்காட்டி ஜனாதிபதி ஊடகப் பிரிவால் வெளி யிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரி விக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள் ளதாவது:-

கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் புனித ஹெரால்ட் அந்தோனி ஆண்டகையின் வேண்டுகோளுக்கிணங்க உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் 88 தொகுதிகள் மற்றும் 48 ஆயிரத்து 909 பக்கங்கள் அடங்கிய அனைத்து ஆவணங்களையும் 2023 ஏப்ரல் 20 ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், புனித ஹெரால்ட் அந்தோனி பாதிரியாரிடம் கையளித்தார்.

கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் புனித ஹெரால்ட் அந்தோனி ஆண்டகையுடன் நேற்றுமுன்தினம் (05) பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தொலைபேசியில் கலந்து ரையாடியபோது, தான் குறித்த அறிக்கையை ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, அந்த அறிக்கையை ஆராய்ந்த பின்னர் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராக உள்ளார்.

இலங்கையின் உள்ளக விவகாரங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்துவதுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கையின் அரசமைப் பிலும் வேறு எந்தச் சட்டத்திலும் சர்வதேச விசார ணைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இல்லை. அதன்படி, இது போன்ற விசாரணைகளை நடத்துவது சட்டவிரோதமானது.

சனல் 4 தொலைக்காட்சி நிகழ்ச்சி குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

ஆயர்கள் பேரவை, ஆணைக்குழுவின் அறிக் கையை ஆய்வு செய்த பின்னர் இது குறித்து மேலும் கலந்துரையாட அரசு எதிர்பார்க்கின்றது. – என்றுள் ளது.





# வடக்கு மாகாண வர்த்தகக் கண்காட்சி ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் உள்ளூர் உற்பத்தி பொருள்களுக்கான வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை யாழ். மாவட்ட செயலகத்துடன் இணைந்து நடத்தும் இக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு யாழ். மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் நேற்று காலை நடைபெற்றபோது வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன கண்காட்சியை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இக் கண்காட்சியில் நூற்றுக்கும் அதிகமான உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

நேற்று ஆரம்பமான இக்கண்காட்சி நாளை வரை காலை 9.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வடக்கு மாகாண உற்பத்தியாளர்களுக்குச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த வர்த்தகக் கண்காட்சியில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களான கடல் சார் உணவுகள், பனை, தும்பு சார் உற்பத்திப் பொருள்கள், ஆடைகள், தோல் உற்பத்திப் பொருள்கள், உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன்பந்துலசேன, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் லசந்த காரிய பெரும, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக செயலாளர் ஏ.லக்கதாஸ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் என்.நந்தகோபாலன், தொழிற் திணைக்கள பணிப்பாளர் திருமதி. வனஜா, யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன் மற்றும் மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைப்பாளர், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





## யாழ். மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ண கயிறிழுத்தல் போட்டியில்

# இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது பருத்தித்துறை பிரதேச செயலக அணி

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணப் போட்டிகளின் ஒரு பகுதியாக நேற்று வடமராட்சி கிழக்கு வத்திராயன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற கயிறிழுத்தல் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலகப் பெண்கள் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

இந்த அணி முதல் சுற்றில் உடுவில் பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டும், காலிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலக அணியை வீழ்த்தியும், அரையிறுதிப் போட்டியில் பலம் வாய்ந்த யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியை வீழ்த்தியும் இறுதிப் போட்டிக்கு நுழைந்துள்ளது.

இந்த அணி இறுதிப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்துப் போட்டியிடவுள்ளது.

இறுதிப் போட்டியானது அரச அதிபர் வெற்றிக்கிண்ண இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்வன்று வேலணை பிரதேச செயலகப் பிரிவில் நடைபெறவுள்ளது.

# மும்பையில் அடுக்குமாடி குடியிருப்பில் தீ: 7 பேர் பலி; 40 இற்கும் மேற்பட்டோர் காயம்



மகாராஷ்டிரா மாநிலம் மும்பையின் கோரேகான் பகுதியில் நேற்று அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் 5 பேர் பெண்கள், இருவர் ஆண் ஆவர். இவர்களில் இருவர் குழந்தைகள். காயமடைந்தவர்களில் பெண்கள், ஆண்கள், குழந்தைகள் என அனைத்துத் தரப்பினரும் உள்ளனர். விபத்தில் சிக்கி காயம் அடைந்தவர்கள் மும்பை ஹெச்பிடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அதிகாலையிலேயே நடந்த இந்தச் சம்பவம் மும்பையில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கோரேகான் எம்.ஜி. சாலையில் உள்ள ஜெய் பவானி கட்டத்தில்தான் இந்த தீ விபத்து நடந்துள்ளது. 7 தளங்கள் கொண்ட இந்தக் கட்டிடத்தில் நேற்று அதிகாலை 3.05 மணியளவில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

முதற்கட்ட தகவலின் அடிப்படையில் கட்டிடத்தின தரைத் தளத்தில் இருந்த கடைகளில் ஏற்பட்ட தீ அடுத்தடுத்த தளங்களுக்குப் பரவியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் தரைத் தளத்தில் தீ பற்ற என்ன காரணம் என்பது உறுதி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த இரண்டு ஆண்டுகளில் இடதுசாரி தீவிரவாதம் ஒழிக்கப்படும்!

## - மத்திய அமைச்சர் அமித்ஷா தெரிவிப்பு

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர்கள் மற்றும் பிர அதிகாரிகளுடன் நேற்று டில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆலோசனை நடத்தினார்.

கூட்டத்தில் பேசிய அவர், பிரதமர் மோடி தலைமையின் கீழ், கடந்த சில ஆண்டுகளில் இடதுசாரி தீவிரவாதத்தை ஒடுக்குவதில் வெற்றி அடைந்துள்ளது. இப்போது இந்த முயற்சி ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளது.

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மாநிலங்களின் ஒத்துழைப்புடன், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இடதுசாரி தீவிரவாதத்துக்கு எதிராக பெரிய வெற்றிகள் எட்டப்பட்டுள்ளன.

அடுத்த 2 ஆண்டுகளில் இடதுசாரி தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிப்பதற்கு இந்த ஆண்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டிலிருந்து இடதுசாரி தீவிரவாதிகளின் பகுதிகள் சுருங்கி வருகின்றன என்று தெரிவித்துள்ளார்.




# 'தி.மு.கவுக்கு யார் போட்டி என்பதில்தான் போட்டி'

மக்களவைத் தேர்தலில் தி.மு.கவுக்கு யார் போட்டி என்பதில்தான் இப்போது தமிழகத்தில் போட்டி இடம்பெறுகிறது என்று தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவரிடம் நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில், தி.மு.க. – பா.ஜ.க. இடையேதான் போட்டி என்று அண்ணாமலை கூறியிருப்பது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.



இதற்கு பதிலளித்த உதயநிதி, இதுகுறித்து அ.தி.மு.க. தலைவர்களிடம்தான் கேட்க வேண்டும். எங்களைப் பொறுத்தவரை, யாராக இருந்தாலும் ஒன்றுதான். எங்கள் கட்சியின் தலைவரின் வழிகாட்டலின்படி தேர்தலை எதிர்கொள்வோம். மக்களவைத் தேர்தலில் திமுகவுக்கு யார் போட்டி என்பதில்தான் இப்போது தமிழகத்தில் போட்டி நடந்துகொண்டிருக்கிறது. எங்கள் தலைவரின் வழிகாட்டுதலின்படி தேர்தலில் வெற்றி பெறுவோம் என்று தெரிவித்துள்ளார்.

# ஈரானிய சமூக செயற்பாட்டாளருக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிப்பு



ஈரானிய சமூக செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான நர்கிஸ் முகம்மதிக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் பெண்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு எதிராக போராடியதற்காகவும், மனித உரிமைகளுக்காக அவர் நடத்திய போராட்டத்திற்காகவும் அவருக்கு 2023 ஆம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானிய ஆட்சியாளர்கள் அவரை 13 முறை கைது செய்துள்ளனர். ஐந்து முறை அவர் குற்றவாளி என்று தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

இதனால், மொத்தம் 31 ஆண்டுகள் அவர் சிறைத்தண்டனையுடன் 154 கசையடிகளையும் பெற்றுள்ளார். துயரம் என்னவென்றால், நர்கிஸ் முகம்மதி இன்னும் சிறையில் தான் இருக்கிறார்.

இயற்பியல் மாணவியான முகம்மதி, சமத்துவம் மற்றும் பெண்களின் உரிமைகளுக்காக போராடுபவராக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார்.

ஈரானிய பெண்களுக்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்ட சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உதவுவதற்கான முயற்சிகளுக்காக 2011 ஆம் ஆண்டில் முதன்முறையாக கைது செய்யப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு பல ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

பிணையில் வெளிவந்த முகம்மதி, ஈரானில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு எதிரான போராட்டங்களில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

அவரது இந்த போராட்டம், 2015 ஆம் ஆண்டு மீண்டும் அவர் கைது செய்யப்பட்டு, கூடுதலாக சில ஆண்டுகள் சிறைக்குள் இருக்கும் நிலையை உருவாக்கியது.

சிறைப்பிடிக்கப்பட்டதிலிருந்து, நர்கிஸ் முகம்மதி, ஈரானில் போராட்டங்களுக்கான வலு குறையாமல் இருக்க உதவிக்கொண்டேயிருந்தார்.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம் ஆகிய துறைகளுக்கான நோபல் பரிசுகள் இதுவரை அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்று அமைதிக்கான நோபல் பரிசு நர்கிஸ் முகம்மதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரு வாரத்தில் உக்ரைன் நிராயுதபாணியாகிவிடும்!

## - விளாடிமிர் புடின் தெரிவிப்பு




மேற்கத்தேய நாடுகளின் ஆதரவு இல்லையென்றால் ரஷ்யா ஒரு வாரத்திற்கு மேலாக போரில் தாக்கு பிடித்திருக்க முடியாது என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

மாதாமாதம் உக்ரைன் பெறும் நிதியுதவியினால் ரஷ்யாவிற்கு எதிராக உக்ரைன் தூக்கி நிறுத்தப்பட்டு வருகிறது.

நிதியுதவி மட்டுமல்லாமல், இராணுவ தளபாட உதவிகள் என அனைத்தும் நின்றுவிட்டால், ஒரு வாரத்தில் உக்ரைன் நிராயுதபாணியாகிவிடும்.

தற்போது வரை ரஷ்யாவிற்கு எதிராக உக்ரைன் போரிட்டதில், 90ஆயிரம் வீரர்களுக்கு மேல் இழந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவுடன் இணைந்து அபிவிருத்தியடையும் பங்களாதேஷ்

பங்களாதேஷ் தனது முதல் அணுமின் நிலையத்திற்கு தேவையான யுரேனியத்தை ரஷ்யாவிடம் இருந்து பெற்றுள்ளது.

அதன்படி, அணுசக்தியை உற்பத்தி செய்யும் 33வது நாடாக பங்களாதேஷ் திகழ்கிறது.

ரஷ்ய அரசுக்கு சொந்தமான அணுசக்தி நிறுவனமான ரொசாட்டம் நிறுவனத்துடன் இணைந்து இது நிர்மாணிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்திற்காக, 12.65 பில்லியன் டாலர்கள் செலவிடப்படும், அதில் 90 வீதம் 28 ஆண்டுகளுக்குள் 10 ஆண்டுகள் சலுகைக் காலத்துடன் திருப்பி செலுத்தப்படுவதாக கூறப்படுகிறது.

# யாழ். சுகாதாரக் குழு அக்கரைப்பற்றுக்கு



(சியாத்.எம்.இஸ்மாயில் )

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலைக்கு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார பணிமனைக்குட்பட்ட தெல்லிப்பளை, ஊர்காவற்துறை, பருத்தித்துறை ஆகிய மூன்று ஆதார வைத்திய சாலைகளதும்கழிவுமுகாமைத்துவத்தில் பணியாற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை குழுவினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (05) களவிஜயம் மேற்கொண்டிருந்தனர்.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் மற்றும் பொறுப்பு வைத்திய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர்கள் அவர்களை வரவேற்றனர்.

வைத்தியசாலை கழிவு முகாமைத்துவம் மற்றும் ஏனைய வைத்தியசாலை பிரிவுகளையும் வருகை தந்தோர் பார்வையிட்டனர்.

யாழ். பிராந்திய சுகாதார பணிமனையின் சுற்றாடல் உணவு பாதுகாப்பு வைத்திய அதிகாரி டாக்டர். கமலராஜன், தெல்லிப்பலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். எம்.எம்.றெமன்ஸ், ஊர்காவற்துறை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். திசானி, பருத்தித்துறை வைத்தியசாலை பொறுப்பு அதிகாரிகள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலை சார்பில் பொறுப்பு வைத்திய அதிகாரிகளான டாக்டர்கள்.எம்.எம். தாஸிம்,எஸ். அகிலன், எம்.எச்.எம். சனூபர், மற்றும் தாதிய பரிபாலகர் பி.ரி. நௌபர், நிர்வாக உத்தியோகத்தர் கே.விஜயகுமார், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கள விஜயத்தின் நினைவாக ஞாபகச் சின்னம் வழங்கப்பட்டது.




# கிழக்குப் பல்கலையில் ஆய்வரங்கு!

(பழுவூரான்)

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் 6 ஆவது சர்வதேச ஆய்வரங்கும் ஆய்வுரைகள் சமர்ப்பிப்பும் மட்டக்களப்பு கல்லடியில் நடைபெற்றன.

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் வசந்தி அரசரெட்ணம் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கட்புல அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழகப் பீடாதிபதி பேராசிரியர் கோவித பானு திஸாநாயக்கவும், தலைமை பேச்சாளராக கட்புல அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழக இயக்குநர் பேராசிரியர் ரோஹான் நேத்சிங்கவும், கௌரவ விருந்தினராகக் கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வ.கனகசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



“சமகால சூழலில் சமூகப் பொருளாதார மற்றும் கலாசார வல்லுநர்களின் கலைகள்” எனும் தொனிப்பொருளில் இந்த ஆய்வரங்கு நடைபெற்றது.

58 ஆய்வுக் கட்டுரைகள் இந்த ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன. 11 ஆய்வரங்குகளில் இந்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டதாக ஆய்வு மாநாட்டின் செயலாளர் கலாநிதி நிலங்கா லியனகே தெரிவித்தார்.



# மல்வத்தை ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்குக் காணி

**(அபு அலா)**

அம்பாறை - சம்மாந்துறை மல்வத்தை ஆயுர்வேத மத்திய மருந்தம் அமைந்துள்ள வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த புதன்கிழமை (04) சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரத்தை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஶ்ரீதரிடம் வழங்கப்பட்டது.



# சித்திரப் போட்டிக்குத் தெரிவு!



**(எம்.எம்.றம்ஸீன்)**

கல்வி அமைச்சால் தேசிய ரீதியில் அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் தரம் 12 இல் கற்கும் பாலமுனை அல் ஹிதாயா பெண்கள் கல்லூரி மாணவி எப்.எப்.இனாயா பாடசா மாணவி வெற்றி பெற்று தேசிய மட்ட இறுதிச்சுற்றுப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த மாணவியை பயிற்றுவித்த ஆசிரியை திருமதி ஐ.எப்.முனாஸபா, வழி நடத்திய அதிபர் ஆகியோருக்கு பாடசாலை கல்வி சமூகம் பாராட்டுக்களைத் தெரிவித்துத்துள்ளது.

அகில இலங்கை சிறுவர் சித்திர போட்டியில் நாடளாவிய ரீதியில் 20 மாணவர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்படுவர்.

இறுதிப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை குருநாகல் ரிதிவிகாரையில் இடம்பெறவுள்ளது.



# கரும்புகையைக் கக்கும் வாகனங்கள் பற்றி இனிமேல் ‘வட்ஸ் அப்’பில் முறையிடலாம்

அதிக அளவில் கரும்புகையை வெளியிடும் வாகனங்கள் தொடர்பில் மக்கள் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

070 3500 525 எனும் ‘வட்ஸ் அப்’ இலக்கத்தின் ஊடாக இந்த விடயம் தொடர்பான முறைப்பாடுகளை மக்கள் முன்வைக்க முடியும்.

அதிக அளவில் கரும்புகையை வெளியிடும் வாகனங்களையும் அவை பயணிக்கும் இடத்தையும் தெளிவாக அறியக்கூடிய வகையிலான படத்தை இந்த இலக்கத்திற்கு அனுப்பி வைக்க முடியும் என அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.

அந்த தகவலின் அடிப்படையில், நிதியத்தின் கண்காணிப்பு பிரிவு விசாரணைகளை முன்னெடுக்கும் என்பதுடன், குறித்த வாகனத்தை அடையாளம் கண்டு, குறைபாட்டை சீர்செய்வதற்கு ஒரு மாத அவகாசம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் அந்த குறைபாடு சீர்செய்யப்படாத பட்சத்தில், வாகனத்தின் வருமான வரி அனுமதிப் பத்திரம் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்படும் என வாகனப் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

வாகனப் புகைப் பரிசோதனை நிலையங்கள் மற்றும் நடமாடும் நிலையங்களில் உரிய முறையில் சேவை வழங்கப்படாத பட்சத்தில், அது தொடர்பில் முறைப்பாடு வழங்க முடியும் எனவும் அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.

# கண்டியில் மட்டும் 8 ஆயிரம் நோயாளர்கள் அஞ்சியோகிராம் சோதனைக்கு காத்திருப்பு

## பரிசோதனைகள் தடைப்பட்டுள்ளமையால் இருதய நோயாளர்கள் பெரிதும் பாதிப்பு

கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகளில் அஞ்சியோகிராம் (Angiogram) பரிசோதனைகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஞ்சியோகிராம் பரிசோதனைகளை மேற்கொள்வதில் தடைகள் ஏற்பட்டுள்ளதால், பல இருதய நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என ரச கதிரியக்க தொழில்நுட்ப அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

பரிசோதனை இயந்திரங்கள் செயலிழந்து 6 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை சீர் செய்யப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி தேசிய வைத்தியசாலையில் இந்தப் பரிசோதனை, சிகிச்சைக்கான காத்திருப்பு பட்டியலில் 8 ஆயிரத்திற்கும் அதிகமான நோயாளர்கள் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அஞ்சியோகிராம் பரிசோதனையை தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்வதற்கு ஒரு லட்சம் ரூபாவிற்கும் அதிகமான தொகை செலவாகும் என அரச கதிரியக்க தொழில்நுட்ப அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம சுட்டிக்காட்டியுள்ளார்.

# 9 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண் சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

நாட்டின் ஒன்பது மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள முதலாம் கட்ட மண் சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி, கண்டி, ஹம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், நான்கு மாவட்டங்களுக்குட்பட்ட சில பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இரண்டாம் கட்ட செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



காலி, களுத்துறை, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்

# இன்றைய ராசி பலன்கள் - 07.10.2023



## மேஷம்

இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ளலாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரை யாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதட்டத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். மேலும் உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்தில் ஏற்படும் பொறுப்புகளுக்காக செலவு செய்ய நேரும்.



## ரிஷபம்

உங்கள் பொறுமை சோதனைக்குள்ளா கும் நாள். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்க ளுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர்க ளிடமிருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள், நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.



## மிதுனம்

இன்று அமைதியாக இருக்க வேண் டும். நீங்கள் பதட்டப்படும்படியான சூழ் நிலைகள் உருவாகும். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம். உங்களுக்கு பிரியமானவர்களுடன் உரையாடும் போது பதட்டபடாமல் கவனமாக பேசுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதனால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனை தவிர்க்க வேண்டும். உங்கள் பிரியமானவருடன் நட்பாகவும், சகஜமாகவும் பழக வேண்டும்.

அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது. பணத் தட்டுப்பாடு காரணமாக பணம் கடன் வாங்க நேரும்.



## கடகம்

இன்றைய நாள் சாதகமாக இருக்காது. இன்று யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. உங்களது பல வீனங்களை பலங்களாக மாற்ற முயற்சி செய்யுங்கள்.பணிகளில் தவறுகள் நேர லாம். எனவே பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் மன நிலையில் காணப்படும் மார்பாடு காரணமாக உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். உங்கள் துணையை மகிழ்விக்க முகத்தில் புன்னகையை கொண்டிருங்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது.எனவே இருக்கும் பணத்தைக் கொண்டு நிர்வகிக்க உங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.



## சிம்மம்

இன்றைய நாளை உங்களுக்கு சாதமாக்கிக் கொள்ள பொறுமை தேவை. இன்று அசௌகரியங்கள் காணப்படும். இன்று திட்டங்களை தீட்டி அதனை நம்பி செயலாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் வேலையை உங்கள் மேலதி காரிகள் மதிப்பிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் செயல்திறன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் படைப்பாற்றல் காணப்படும்.

உங்கள் உள்ளத்து ஏமாற்றங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே பணத்தை கவனமான முறையில் செலவு செய்ய வேண்டும்.



## கன்னி

இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இன்றைய நாளை சிறப்பாக பயன் படுத்துவீர்கள், புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லு றவைப் பராமரிப்பீர்கள். பணியில் உங் கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

சிறிய கடன் பெறுவதன் மூலம் உங்கள் பணத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்துகொள்வீர்கள். இருக்கும் பணத்தை குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படுகின்றது.



## துலாம்

உங்கள் திட்டங்கள் மற்றும் அணுகு முறை மூலம் இன்றைய நாளால் அற்பு தமான நாளாக ஆக்குவீர்கள். உங்கள் உரையாடல் திறனை மேம்படுத்தி நன்மை பெறுவீர்கள்.

பணியில் சில தடுமாற்றங்கள் காணப் படும். பனிச் சுமை அதிகமாக காணப்படும். அதிர்ஷ்டத்தை சார்ந்திருப்பதை விட கடின உழைப்பை நம்புங்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவையான அணுகுமுறை கொள்வீர்கள், இதனால் அன்பு மேலும் வளரும்.

நிதி வளர்ச்சி அபாரமாக இருக்கும். சிறய அளவில் கடன் பெறுவதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள்.

மன உளைச்சல் காரணமாக முதுகுவலிப் பிரச்சினைகள் ஏற்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



## விருச்சிகம்

பல தடைகளுக்கு பிறகு வெற்றியைக் காண்பீர்கள். கவலைகளை நீக்கி மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்ற வேண்டும். பணியில் மும்மரமாக காணப் படுவீர்கள்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மை உணர்வு கொள்வீர்கள். இது மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வேறுபாடுகளைக் களைய முயலுங்கள்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

அதிக மன உளைச்சல் காரணமாக கால்களில் வலி காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.10.2023




அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.




உங்கள் கடின உழைப்பின் மூலம் உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள். உங்களுக்கு பிரியமானவர்களை அழைத்து உங்கள் வீட்டில் விருந்து கொடுப்பீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை தரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை பொறுமையாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று கடன் வகையில் பண வரவு காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க பணத்தை சேமிக்கவும்.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். தைரியமும் உறுதியும் காணப்படும். உங்களிடம் சிறந்த ஆற்றல் மற்றும் திருப்தி காணப்படும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். இன்று உங்கள் பணியாற்றும் முறை சிறப்பாக இருப்பதன் காரணமாக சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் மிகவும் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று அதிக அளவு பணம் காணப்படும். தேவையான சமயத்தின் போது உங்களிடம் பணம் இருக்கும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

பெரிய அளவிலான ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.





